## பா–வேந்தர்கள்

### 1. பாரதியார்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சுப்பிரமணியம் |
| **பெற்றோர்** | சின்னசாமி ஐயர் – இலட்சுமி அம்மாள் |
| **ஊர்** | எட்டயபுரம் |
| **மனைவி** | செல்லம்மாள் |
| **காலம்** | 11–12–1882 முதல் 11–09–1921 வரை |

“கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம். அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை” – **மகாகவி பாரதி**

⇒ **புனைப் பெயர்கள்**

- காளிதாசன்
- சக்திதாசன்
- சாவித்திரி
- ஓர் உத்தம தேசாபிமானி
- நித்திய தீரர்
- ஷெல்லி தாசன்

⇒ **சிறப்பு பெயர்கள்**

பாரதியாருக்கு சிறப்பு பெயர்களை வழங்கியவர்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன:

- பாட்டுக்கொருப் புலவன் (கவிமணி)
- பைந்தமிழ் தேர்பாகன் (பாரதிதாசன்)
- சிந்துக்குத் தந்தை (பாரதிதாசன்)
- நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா (பாரதிதாசன்)
- காடு கமழும் கற்பூரச் சொற்கோ (பாரதிதாசன்)
- தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி
- தேசியக்கவி
- விடுதலைக்கவி
- அமரக்கவி
- முன்னறி புலவன்
- மகாகவி
- உலக கவி
- வரகவி

⇒ **இவர் எழுதிய உரைநடை நூல்கள்**

- ஞானரதம் (தமிழின் முதல் உரைநடை காவியம்)
- தராசு
- சந்திரிகையின் கதை
- மாதர்
- கலைமகள்

⇒ **இவர் எழுதிய கவிதை நூல்கள்**

- கண்ணன் பாட்டு
- குயில் பாட்டு
- பாஞ்சாலி சபதம்
- காட்சி (வசன கவிதை)
- புதிய ஆத்திச்சூடி
- பாப்பா பாட்டு
- பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி
- பாரத தேவியின் திருத்தசாங்கம்
- விநாயகர் நான்மணிமாலை

⇒ **இவர் எழுதிய சிறுகதைகள்**

- திண்டிம சாஸ்திரி
- பூலோக ரம்பை
- ஆறில் ஒரு பங்கு
- ஸ்வர்ணகுமாரி
- சின்ன சங்கரன் கதை
- நவ தந்திர கதைகள்
- கதை கொத்து ( சிறுகதை தொகுப்பு)
- இவர் எழுதிய நாடகம் - ஜெகசித்திரம்

⇒ **பிற செய்திகள்**

➢ எட்டயபுர சமஸ்தான புலவர்கள் **பாரதி** என்ற பட்டத்தை அளித்தனர்.

➢ தம்மை ஷெல்லிதாசன் என அழைத்துக் கொண்டார்.

➢ தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதிதிராவிடர்க்கு அளித்தவர்.

➢ 1905– இல் சக்கரவர்த்தினி என்ற இதழைத் தொடங்கினார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- கர்மயோகி, பாலபாரதி ஆகிய இதழ்களை நடத்தினார்.
- சுதேசமித்திரன் என்ற இதழின் துணை ஆசிரியராக பணிபுரிந்தார்.
- இந்தியா என்ற இதழின் ஆசிரியராக பணிபுரிந்தார்.
- சென்னை ஜன சங்கம் என்ற அமைப்பை தொடங்கினார்.
- நிவேதிதா தேவியை சந்தித்தபின் பெண் விடுதலைக்காகவும், தேச விடுதலைக்காகவும் தீவிரமாக பணியாற்றினார்.
- இவரின் ஞானகுரு நிவேதிதா தேவி.
- இவரின் அரசியல் குரு பால கங்காதர திலகர்
- 14 மொழிகளை அறிந்தவர்
- பரலி நெல்லியப்பரை தம்பி என அழைத்தார்.
- பாரதியாரின் பாடல்களை முதன் முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி நெல்லையப்பர்.
- பாரதியாரின் பாடல்களை முதன் முதலில் வெளியிட்டவர் கிருஷ்ணசாமி ஐயர்.
- பாரதியின் படத்தை வரைந்தவர் ஆரிய பாஷ்யம் என்பவர்
- பாரதியாருக்கு மகாகவி என்ற பட்டத்தை வழங்கியவர் (வ.ர.ராமசாமி ஐயங்கார்)
- பாரதி சங்கத்தை தொடங்கியவர் கல்கி
- மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்தார்.
- இவரின் பாடல் முதன் முதலில் வெளிவந்த இதழ் விவேக பானு 1904.பாடலின் தலைப்பு தனிமை இறக்கம்.
- இவர் கீதையை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- இவர் பதஞ்சலி சூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளார்.
- தாகூரின் சிறுகதைகளை 11 தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- உரைநடை என்பது கூடியவரை பேசுவது போலவே இருக்க வேண்டும் என்று கூறியவர்.
- தமிழில் முதன் முதலில் கருத்து படங்களை வெளியிட்டவர்.
- கவிதையில் சுய சரிதம் எழுதிய முதல் கவிஞர்.
- அனைவரும் தாய்நாடு எனக் கூற பாரதி மட்டும் தந்தையர் நாடு என்று கூறினார்
- பாரதியின் கடிதங்களை பாரதியின் கடிதங்கள் என்ற பெயரில் நூலாக முதன் முதலில் பதிப்பித்தவர் ரா. ஆ. பத்மநாபன் ஆவார்.

**பாரதியார்**

உரைநடையும், கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் '**வசன கவிதை**' எனப்படுகிறது. இது ஆங்கிலத்தில் Prose Poetry (Free Verse) எனப்படுகிறது. இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்க கவிதை படிக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை கையாண்டு உள்ளார். புதுக்கவிதைகள் தோன்றுவதற்கு இவ்வடிவம் காரணமாயிற்று.

⇒ **<u>பாராட்டுரைகள்</u>**

✓ பாரதியார் ஓர் அவதார புருஷர் இவர் நூலை தமிழர் வேதமாக கொள்ள வேண்டும். **– பரலி நெல்லையப்பர்**

✓ பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும் இந்தியன் நான் என்றிடும் நல் இருமாப்பு உண்டாகும். **– நாமக்கல் கவிஞர்**

✓ இவரின் பாப்பா பாட்டில் நெஞ்சை பறிகொடுத்தேன். **- கவிமணி**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

✓ "அவனுக்கு (பாரதி) நந்தனார் சரித்திர கீர்த்தனை மெட்டும் தெரியும்;
ஜப்பானிய ஹைக்கூ லாவகமும் புரியும்.
தாகூரையும் அறிவான்; வால்ட் விட்மனின் புதுக்கவிதை ஒலியையும் உணர்வான்.
காளிதாசனான அவன் ஷெல்லிதாசனாகவும் தன்னை அறிவித்துக் கொண்டவன்.
சுதந்திரத்தையும்,பெண் உரிமையையும் புதுயுகக் கனவுகளையும் நவநவமான மொழிகளில் பேசியவன்"

**- சிற்பி. பாலசுப்பிரமணியம்**

✓ 'இவருடைய பாடல்களில் கருத்தாழமும், ஆற்றலும், எளிமையும் இசை நயமும் தொடர் இன்பமும், ஒருங்கு அமையக் காண்கிறோம். இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழுலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றவில்லை"

**– எஸ்.வையாபுரி பிள்ளை.**

**மேற்கோள்கள் :**

- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"
- "சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே – அதைத் தொழுது படித்திடடி பாப்பா"
- "மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையை கொளுத்துவோம்"
- "ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில்"
- "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்"
- "முப்பதுகோடி முகமுடையாள் – உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள் செப்புமொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்"
- "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்".
- "ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி"
- "பாருக்குள்ளே நல்ல நாடு"
- "நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்"
- "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று".
- "வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"
- "காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்குவோம்".
- "தனியொருவனுக் குணவிலை யெனில் சகத்தினை அழித்திடுவோம்"
- "வாழிய செந்தமிழ் ; வாழ்கநற் றமிழர்"
- "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் – ஆனால் மறுபடியும் தர்மம் வெல்லும்".
- "செந்தமிழ் நாடென்ற போதினிலே – இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"
- பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப் பழமையிருந்த நிலை கிளியே பாமரர் ஏதறிவார்.
- "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்"
- "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"
- தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ❖ “பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”
- ❖ “பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்”.

## 2. பாரதிதாசன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | கனகசுப்புரத்தினம் |
| **பெற்றோர்** | கனக சபை - இலக்குமி அம்மையார் |
| **மனைவி** | பழனி அம்மையார் |
| **ஊர்** | புதுச்சேரி |
| **காலம்** | 29 /04 /1891 முதல் 21/04/1964 வரை |

**சிறப்பு பெயர்கள்:**

- ❖ **புரட்சி கவிஞர்** (அறிஞர் அண்ணா சூட்டியது)
- ❖ பாவேந்தர், புதுவைக்குயில், பகுத்தறிவு கவிஞர், தமிழ்நாட்டு இரசூல், கம்சதீவ், இயற்கை கவிஞர்.

**இவருடைய கவிதை நூல்கள்**:

| | |
|---|---|
| இசையமுது | குறிஞ்சி தட்டு |
| பாண்டியன் பரிசு | கண்ணகி புரட்சிக் காப்பியம் |
| எதிர்பாராத முத்தம் | மணிமேகலை வெண்பா |
| சேர தாண்டவம் | சுப்பிரமணியர் துதியமுது |
| அழகின் சிரிப்பு | சுதந்திரம் |
| புரட்சிக்கவி | தமிழச்சியின் கத்தி |
| குடும்ப விளக்கு | ஏற்றப்பாட்டு. |
| இருண்ட வீடு | |

⇒ **<u>இவருடைய உரைநடை நூல்கள்:</u>**

- ❖ சஞ்சீவி பருவத்தின் சாரல்
- ❖ திருக்குறள் உரை நூல்

⇒ **<u>நாடகங்கள்:</u>**

- ❖ சௌமியன்,
- ❖ நல்ல தீர்ப்பு,
- ❖ சக்திமுற்ற புலவர்,
- ❖ இரணியன் அல்லது இணையற்ற வீரன்,
- ❖ படித்த பெண்கள்,
- ❖ இன்பக்கடல்,
- ❖ பிசிராந்தையார் (சாகித்திய அகாதமி விருது பெற்றது)

⇒ **<u>இவர் நடத்திய இதழ்கள்:</u>**

- ❖ முல்லை
- ❖ குயில்

⇒ **<u>இவருடைய காவியங்கள்:</u>**

- ❖ காதலா ? கடமையா ?
- ❖ கடற்மேற் குமிழிகள்

⇒ **<u>பிற செய்திகள்:</u>**

- ❖ பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக தனது பெயரை **“பாரதிதாசன்”** என மாற்றிக் கொண்டார்.
- ❖ அகவல், எண்சீர்விருத்தம், அறுசீர்விருத்தம் ஆகியவை இவருடைய பாடல்களில் மிகுதியாக காணப்படுகின்றன.
- ❖ வேலு நாயக்கர் இல்ல திருமணத்தில் பாரதியாரை சந்தித்தார். அவரின் வேண்டுகோளுக்கு இணங்க பாரதிதாசன் பாடிய ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்ற பாடலை இயற்றினார். அக்கவிதையைத் தாமே ‘ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தை சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது’ என்ற குறிப்புடன் சுதேசமித்திரன் பத்திரிக்கைக்கு பாரதியார் அனுப்பினார்.
- ❖ இவரின் தொடக்கக் கல்வி ஆசிரியர் **திருபுளிச்சாமி**
- ❖ இவரின் தமிழாசிரியர்– புலவர்பு.அ. **பெரியசாமி**
- ❖ இவரின் சித்தாந்த குரு – **புலவர்பங்காரு பத்தர்**
- ❖ நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் அறிஞர் அண்ணா இவருக்கு **“புரட்சிக்கவி”** என்ற பட்டத்தை வழங்கினார்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ❖ இவர் தன் வீட்டில் தீபாவளி, ஆயுத பூஜை, விநாயகர் சதுர்த்தி போன்ற ஆன்மீக விழாக்கள் கொண்டாடுவதை தவிர்த்து விட்டார்.
- ❖ 'குடியரசு', 'பகுத்தறிவு' போன்ற ஏடுகளில் தம் படைப்புகளை எழுதி வந்தார்.
- ❖ **'தன்மதிப்பு மாநாடு'** ஒன்றை புதுவையில் நடத்தினார்.
- ❖ மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னையில் நடந்த நாத்திகர் மாநாட்டின் பதிவேட்டில் **'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்'** என்று எழுதி கையெழுத்திட்டார்.
- ❖ இந்தியாவில் முதன்முதலாக 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்ற ஏட்டினை கவிதைகளுக்காக மட்டுமே தொடங்கினார்.
- ❖ '**தன்மான இயக்கத்தின் பாவலர்**' என்று பெரியார் இவரை பாராட்டியுள்ளார்.
- ❖ பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியை, கடலூர் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி நாராயணசாமி நாயுடு ஆகியோரின் பொருள் உதவியுடன் வெளியிட்டார்.
- ❖ இவருடைய பாடல்களை செக்நாட்டு அறிஞர் கமில் சுவலபில், செக் மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

⇒ **புனைப்பெயர்கள்:**

- ❖ கண்டெழுதுவோன்,
- ❖ கிறுக்கன்,
- ❖ கிண்டற்காரன்.

⇒ **பாராட்டுரைகள்:**

✓ "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகிற பேரறிஞன்".
**- புதுமைப்பித்தன்.**

✓ "பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி"
**- கு.ப.ராஜகோபாலன்.**

✓ "அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகி விடுவான்"
**– சிதம்பரநாத செட்டியார்.**

✓ "புரட்சிக்கவி பாரதிதாசன், புதிய கவிதையை சிருஷ்டி செய்கிறார். இயற்கையாகவே தமிழ் மொழியில்
புதிய வளைவும், நெளிவும், மெருகும் ஏற்றுகிறார்.
அவர் இசை வெறியில் கவிதைக் கனலுடன் பாடும் போது
நாம் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும்
சலிப்பின்றிக் கேட்டு இன்புறலாம்.
**– வி. ஆர். எம். செட்டியார்**

✓ "குயிலின் பாடலும், மயிலின் ஆடலும் வண்டின் யாழும், அருவியின் முழவும், பாரதிதாசனின் கவிதைகளும் இனிக்கும்"
**- திரு.வி.க**

✓ "தடையேதும் இல்லை இவர் நடையில், வாழைத் தண்டுக்கோ தடுக்கின்ற கனுக்கள் உண்டு" **- கவிஞர் சுரதா.**

⇒ **அரசு செய்த சிறப்புகள்:**

- ❖ 1965 – இல் பாரதிதாசன் நினைவு மண்டபம் புதுவை நகராட்சியினரால் கட்டப்பட்டது.
- ❖ 1968– இல் சென்னை மெரீனா கடற்கரையில் இவரின் திருவுருவச்சிலை அறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ❖ 1971– இல் பாவேந்தர் வாழ்ந்த இல்லம் அரசுடமையாக்கப்பட்டு, புரட்சி கவிஞர் நூலகம், நினைவகம், அருங்காட்சியகம் என ஆவண காப்பகமாக திகழ்கின்றது.
- ❖ 1972–ல் புதுவையில் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.
- ❖ 1982–ல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அன்றைய முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரனால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ❖ 1990 இல் பாவேந்தர் படைப்புகள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

❖ வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே என்ற இவரின் தமிழ் வாழ்த்து பாடலை புதுவை அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது.

⇒ **மேற்கோள்கள்**

❖ "புதியதோர் உலகு செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

❖ "தமிழை பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே"

❖ "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

❖ "நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்"

❖ "இருட்டறையில் உள்ளதடா உலகம்"

❖ "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

❖ "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே"

❖ இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவ என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில் தூய்மை உண்டாக்கிடும், வீரமும் வரும்.

❖ 'தேனொக்கும் செந்தமிழே! நீ கனி! நான் கிளி வேறென்ன வேண்டும் இனி?'

❖ 'உறுதி! உறுதி! ஒன்றே சமூகம் என்று எண்ணார்க்கு இறுதி! இறுதி!'

❖ 'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம் கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்".

❖ 'இல்லானும் அங்கில்லை பிறர் நல எனதென்று தனிபொருவன் சொல்லான் அங்கே

❖ 'எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்கு உள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்".

❖ பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிபடாது.

❖ பெண்ணடிமை தீர்வு மட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.

❖ "விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை மானுட சமுத்திரம் நானென்று கூவு புவியை நடத்து; பொதுவில் நடத்து!

## 3. நாமக்கல் கவிஞர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | வெ. ராமலிங்கனார் |
| **பெற்றோர்** | வெங்கடராம பிள்ளை-அம்மணி அம்மாள் |
| **ஊர்** | மோகனூர் (நாமக்கல் மாவட்டம்) |
| **காலம்** | 19-10-1888 முதல் 24-08-1972 வரை |

⇒ **சிறப்புப் பெயர்கள்:**

❖ நாமக்கல் கவிஞர்

❖ காந்தியக் கவிஞர்

❖ ஆஸ்தானக் கவிஞர்

❖ காங்கிரஸ் புலவர் ( விஜயராகவ ஆச்சாரியார் சூட்டியது)

⇒ **இவருடைய நூல்கள்:**

| | |
|---|---|
| அவனும் அவளும் (காப்பியம்) | பிரார்த்தனை |
| இலக்கிய இன்பம் | இசைத்தமிழ் |
| தமிழன் இதயம் (கவிதை தொகுப்பு) | தமிழ்த்தேர் |
| என் கதை (சுய சரிதம்) | தாமரைக்கண்ணி |

| | |
|---|---|
| சங்கொலி (கவிதைதொகுப்பு) | கற்பகவல்லி |
| கவிதாஞ்சலி | காதல் திருமணம் |
| தேமதுரத் தமிழோசை | தாயார் கொடுத்த தனம் |

⇒ **<u>நாவல்:</u>**

- ❖ மலைக்கள்ளன் (திரைப்படமாக பின்னர் வெளிவந்தது)

⇒ **<u>உரைநடை நூல்கள்:</u>**

- ❖ கம்பரும் வான்மீகியும்

⇒ **<u>நாடகம்:</u>**

- ❖ மாமன் மகள்
- ❖ சரவண சுந்தரம்

⇒ **<u>மொழிபெயர்ப்பு நூல்:</u>**

- ❖ காந்திய அரசியல்

⇒ **<u>இதழ்:</u>**

- ❖ லோகமித்திரன்

⇒ **<u>படைப்புகள்:</u>**

- ❖ இசை நாவல்கள் -3
- ❖ கட்டுரைகள்-12
- ❖ தன் வரலாறு-3
- ❖ புதினங்கள்-5
- ❖ இலக்கிய திறனாய்வுகள்-7
- ❖ கவிதை தொகுப்புகள்-10
- ❖ சிறு காப்பியங்கள்-5
- ❖ மொழிபெயர்ப்பு நூல்கள்-4

⇒ **<u>பிற செய்திகள்</u>**

- ❖ இவரின் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டவர் தணிகை உலகநாதன்.

⇒ இவர் தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் ஆவார். இவர் அரசவைக் கவிஞராக நியமனம் பெற்றபோது 'இந்த சமயத்தில் பாரதி இல்லையே என்று ஏங்கினேன் அந்தக் குறையை நீங்கள் நீக்கிவிட்டீர்கள்' என்று ராஜாஜி கூறினார்.

- ❖ காரைக்குடிக்கு பாரதியார் வந்திருப்பதாக இந்த நாமக்கல் கவிஞர், பாரதியாரைச் சந்திக்க சென்றார். அங்கு பாரதியார், கவிதை ஒன்று சொல்லுமாறு நாமக்கல் கவிஞரிடம் கேட்டார். உடனே இவர் எஸ்.ஜி கிட்டப்பா நாடகத்திற்காக தாம் எழுதிக் கொடுத்த 'தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத் தாம் வணங்கிக் கைகட்டி நின்ற பேரும்' என்ற பாடலை பாடினார். பாடல் முழுவதையும் கேட்ட பாரதியார், பலே பாண்டியா! பிள்ளை, நீர் ஒரு புலவன் என்பதில் ஐயமில்லை என்று பாராட்டினார்.
- ❖ நாமக்கல் கவிஞர் சிறந்த ஓவியர். 1911– இல் தில்லிக்குச் சென்று கவிஞர், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரையும், அரசியையும் ஓவியம் தீட்டி அதற்காகப் பொற்பதக்கம் பெற்றவர்.
- ❖ 'நாட்டுக்கும்மி' என்ற தலைப்பில் 100 தேசப்பக்தி பாடல்களை எழுதி சேலம் எஸ்.விஜயராகவ ஆச்சாரியார் முன்பு பாடி அரங்கேற்றம் செய்தார்.
- ❖ நடுவணவரசின் **பத்மபூஷன்** விருதினை பெற்றவர்.

⇒ **<u>பாராட்டுரைகள்:</u>**

- ❖ "நாமக்கல் கவிஞருடைய பாடல்களில் உணர்ச்சியின் ஆழமும் வேகமும் காண்பதற்கில்லை; பண்பாட்டின் அமைதியை காணலாம். அது காந்தியத்திற்கு ஒத்து வருவதாக உள்ளது" **– டாக்டர் மு. வ.**
- ❖ "திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராக தோன்றியது". **– மூதறிஞர் ராஜாஜி.**

⇒ **<u>மேற்கோள்கள்:</u>**

⇒ "கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது".

⇒ "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணம் உண்டு".

⇒ "இந்திய நாடு என்னுடைய நாடு என்று தினம் தினம் நீயதை பாடு".

⇒ "பாட்டாளி மக்களின் பசி தீர வேண்டும் பணம் என்ற மோகத்தின் விசை தீர வேண்டும்"

⇒ "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்".

## 4. கவிமணி

| | |
|---|---|
| **இயற்பெயர்** | தேசிய விநாயகம் பிள்ளை |
| **பெற்றோர்** | சிவதாணுபிள்ளை– ஆதிலட்சுமி அம்மையார் |
| **மனைவி** | உமையம்மையார் |
| **ஊர்** | தேரூர் கன்னியாகுமரி மாவட்டம் |
| **ஆசிரியர்** | சாந்தலிங்க தம்பிரான் |
| **காலம்** | 27 –8 –1876 முதல் 26–9 –1954 |

⇒ **சிறப்பு பெயர்கள்:**

❖ கவிமணி ( சென்னை மாகாண தமிழ்ச் சங்கத்தின் தலைவர் உமாமகேசுவரனார் சூட்டியது)

❖ குழந்தை கவிஞர்

❖ நாஞ்சில் நாட்டு கவிஞர்

❖ தழுவல் கவிஞர்

❖ சமுதாய கவிஞர்

❖ உணர்ச்சி கவிஞர்

❖ விடுதலை கவிஞர்

⇒ **இவருடைய நூல்கள்:**

| | |
|---|---|
| • அழகம்மை ஆசிரிய விருத்தம் (இவர் இயற்றிய முதல் நூல்) | • குழந்தைச் செல்வம் |
| • காந்தளூர் சாலை, | • தேவியின் கீர்த்தனைகள் |
| • மலரும் மாலையும், | • தீண்டாதார் விண்ணப்பம் |
| • ஆசிய ஜோதி | • கவிமணியின் உரை மணிகள் |
| • நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் ( நகைச்சுவை நூல்) | • கதர் பிறந்த கதை |

⇒ **மொழிபெயர்ப்பு நூல்கள்:**

❖ எட்வின் ஆர்னால்ட் என்பவர் எழுதிய 'டுபைாவ டிக ஹளயை' என்ற நூலை தமிழில் 'ஆசிய ஜோதி' என மொழிபெயர்த்துள்ளார்.

❖ 11–ஆம் நூற்றாண்டை சேர்ந்த பாரசீகக் கவிஞர் 'உமர்கய்யாம்' எழுதிய பாடல்களை தமிழில் 'ரூபாயத்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

⇒ **பிற செய்திகள்:**

❖ நாகர்கோவிலில் உள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

❖ 1922 –ல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார்.

❖ சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார்.

❖ கம்பராமாயணம், திருவாசகம், நவநீத பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளை தொகுத்து இருக்கிறார்.

⇒ **பாராட்டுரைகள்**

❖ "இனிய தமிழில் எவரும் விளங்கப் பாடல் இயற்றும் திறம் மிக்கவர்"– **இரசிகமணி டி .கே. சி**

❖ "விநாயகம் பிள்ளையின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்;


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம், ஆயுள் முழுவதும் தமிழ்மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வாடாத கற்பகப்பூச் செண்டு.

**– இரசிகமணி டி.கே.சி**

❖ “தேசிக விநாயகத்தின் கவி பெருமை தினமும் கேட்பது என் செவி பெருமை”

**– நாமக்கல்.கவிஞர்.**

❖ “கவிமணியின் கவிதைகளைப் புரிந்து கொள்வதற்குப் பண்டிதராக வேண்டியதில்லை; படிக்கத் தெரிந்த எவரும் பொருள் கொள்ளத் தக்க எளிய நடை”

**– டி.கே.சண்முகம்**

❖ “போராட்டமும் பரபரப்பும் மிகுந்த காலத்தில் வாழ்ந்த போதிலும் அவருடைய உள்ளமும், கவிதைகளும் அமைதியும் இனிமையும் உடையனவாக விளங்கியது விந்தையே”

**– டாக்டர்.மு.வ**

❖ “துரும்பென மெலிந்த தேகம், துலங்கிடும் குளிர்ந்த பார்வை, இருப்பினும் வலிய உள்ளம், இனியவே செய்யும் எண்ணம், பரம்பொருள் நினைவே காட்டும் பாரெல்லாம் பறந்த நோக்கம்,கரும்பினும் இனிய சொற்கள், கவிமணி வடிவமாகும்”

**– நாமக்கல் கவிஞர்.**

⇒ **<u>மேற்கோள்கள்:</u>**

❖ “தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி”

❖ “மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா”

❖ “ஓடும் உதிரத்தில் – வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடிப் பார்த்தாலும் – சாதி தெரிவதுண்டோ அப்பா ?”

❖ “உள்ளத்துள்ளது கவிதை– இன்பம் உருவெடுப்பது கவிதை தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை தெரிந்துரைப்பது கவிதை”.

❖ “சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும் சபைகளிலே தமிழெழுத்து முழங்க வேண்டும்”

❖ கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழில் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ!”

www.tnpscgroup4.in